ஞாலகுருவின் படைப்புக்கள்

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,127 பங்குனி மாதம்

# அருட்படை திரட்டி அருட்பணி நிகழ்த்துதல்



குருதேவர், குருமகாசன்னிதானம், ஞானவேந்தர், நிறையக்ஞர், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்கள்.

இந்து இலக்கியக் கழக வெளியீடு

**43,73,127ஆம் ஆண்டின் பங்குனி மாத வெளியீடு.**

**தலைப்பு:- அருட்படை திரட்டி அருளாட்சி அமைப்புப் பணி நிகழ்த்துதல்**

# உள்ளுறை

1. “**இந்துவேதத்தின் உயிர்நாடியான கருத்துக்கள்**” - திருவெள்ளறை என்ற ஊரில் நிகழ்ந்த இ.மு.க. பொதுக்கூட்டத்திற்கு தயாரிக்கப்பட்ட வாழ்த்துரை.
2. “**அருட்படை திரட்டி அருளாட்சி அமைப்புப் பணி**” - மதுரையைச் சேர்ந்த அடியான் இந்துவேதம் பரப்பும் நாயகத்திற்கு குருதேவரின் தலைமைப்பீடம் விடுத்த விளக்கத் திருவோலை.
3. “**அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியார் அழைக்கிறார்**” - குருதேவரின் ஞான உலா பற்றி மக்களுக்குத் தெரிவிக்க வேண்டிய முழக்கங்கள்.

# இந்துவேதத்தின் உயிர்நாடியான கருத்துக்கள்

## வாழ்த்துரை

***சித்தர் பிறம்மசத்தியார் து. சாந்தி துரைராசன்,***
***திருவெள்ளறைப் பொதுக்கூட்டம்.***

(1) பொதுமக்களே! தாய்மார்களே! பெரியோர்களே! எம் போன்ற இளம் வயது பெண்களே! ஆண்களே! சிறுவர்களே! சிறுமியர்களே! உங்கள் அனைவருக்கும் பதினெண்சித்தர் மடத்தின் சார்பாக குவலய குருபீடம், இந்துவேத நாயகம், இந்துமதத் தந்தை, இந்துமதத்தின் தலைமை ஆச்சாரியக் குருபீடக் குருதேவர், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்களுடைய வாழ்த்தினை தெரிவித்துக் கொள்கின்றேன். அவர் எழுந்தருளுகின்ற பொதுக்கூட்டங்களுக்கு வருகின்றவர்களுக்கு வாழ்த்துரை வழங்கும் பொறுப்பு இந்து வேதாகம பாடசாலை மாணவ மாணவியருக்கே வழங்கப்படும். அந்த மரபின்படியே இங்கு இன்று இந்த திருவெள்ளறைப் பொதுக்கூட்டத்தில் இந்துவேதாகம பாடசாலையிலிருந்து சித்தர் யாககணநாதர், சித்தர் பிறம்மசத்தியார், இன்னும் சிலரும் வந்திருக்கிறோம். அடுத்தடுத்து நான்கைந்து இடங்களில் திருச்சி மாவட்டத்தில் பொது நிகழ்ச்சிகள் இருப்பதால் ஒவ்வொன்றிலும் என் போன்ற இந்து வேதாகம பாடசாலையின் மாணவிகளுக்கு வரவேற்புரை வழங்கும் பணியும், வாழ்த்துரை வழங்கும் பணியும் அளிக்கப்பட்டுள்ளன.

(2) இந்து வேதாகம பாடசாலையின் மாணவிகளாகிய எங்களுக்கு பொதுக் கூட்டங்களில் பேசி அதிகம் பழக்கமில்லை. ஆனால், இந்து

வேதாகம பாடசாலையில் எங்களது குருதேவர் பதினெண்சித்தர் மடாதிபதி, பீடாதிபதி, கருகுல ஆதீனம், கருமூலப் பண்டாரம், ஆதிசிவனாரின் வாரிசு, வழித்தோன்றல், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்களின் முன்னிலையில் அவ்வப்போது கூடுகின்ற வேதாகம பாடசாலையின் மாணவ மாணவியர்களுக்கிடையில் உரையாடல்கள், வாக்குவாதங்கள், பட்டிமன்றங்கள் நிகழ்த்தித்தான் எங்களுக்குப் பழக்கம். எனவேதான் குருமகா சன்னிதானம் அவர்கள் எங்களுக்குப் பொதுமேடைகளில் சொற்பொழிவாற்றும் பழக்கம் வர வேண்டும் என்பதற்காக அவர் முன்னிலையில், அவர் கலந்து கொள்ளுகின்ற நிகழ்ச்சிகளில் வரவேற்புரையும், வாழ்த்துரையும் வழங்கும் வாய்ப்புக் கொடுத்துத் தயாரிக்கின்றார்.

(3) மாணவியர்களாகிய நாங்கள் இந்துவேதம் பற்றியும், இந்துமதம் பற்றியும் வேதாகம பாடசாலையில் படித்துக் கொண்டிருக்கின்ற கருத்துக்களில் இருந்து ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறோம்.

(4) பெண்கள்தான் மனித வாழ்க்கையில் எல்லாவகையான செயல்நிலைகளுக்கும்; குடும்பத்தில் உள்ளவர்களின் கொள்கைகளுக்கும், குறிக்கோள்களுக்கும், நடைமுறைகளுக்கும் பொறுப்பாக இருக்கிறார்கள். எனவே, பெண்கள் பொதுமேடையில் கருத்துக்களைக் கூறினால்தான் அவற்றைக் கேட்கக் கூடியவர்கள் அக்கருத்துக்களைப் பற்றிச் சிந்திப்பார்கள். இன்றைக்கும் ஒவ்வொரு குடும்பத்திலும் பாரம்பரியமாய் தொன்றுதொட்டு வரக்கூடிய எல்லாவகையான சடங்குகளையும், சாத்திரங்களையும், சம்பிரதாயங்களையும், பழக்க வழக்கங்களையும், மரபுகளையும், குடும்ப ஆண்டவர்களைக் கும்பிடுவதையும், குலதெய்வங்களைக் கும்பிடுவதையும், கிராமங்களில் உள்ள அந்தந்த கிராமத்துக்குரிய கிராமத்துத் தேவர் தேவதைகளை கும்பிடுவதையும், நாட்டுக்குப் பொதுவாக உள்ள கடவுள்களைக் கும்பிடுவதையும் பொதுவான திருவிழாக்கள், திருநாள்கள் கொண்டாடுவதையும்,

விரதங்கள் இருப்பதையும் ..... ஞாபகமாக மறக்காமல் பாதுகாத்து வருகிறுர்கள்.

எனவேதான், அந்தணர் அண்ணல், ஞானுச்சாரியார் அவர்கள் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்ற வாழ்க்கை, நமது பழக்க வழக்கங்கள், நமது புராண இதிகாசங்கள், நமது கதைகள், கவிதைகள், ஆடல்பாடல் கலேகள், கோயில் வழிபாடுகள், உடைமுறைகள், உணவுமுறைகள், உறவின் உரிமைகள், ... முதலிய அனேத்துமே இந்துவேதத்திலிருந்துதான் உருவானவை; இந்துமதத்தின் மூலம்தான் பழக்கத்தில் செயல் ஊக்கமும், செயல் ஆக்கமும் பெறுகின்றன என்ற பேருண்மையை விளக்குகின்ற பணியை அதிக அளவில் பெண்களே ஏற்க வேண்டும் என்று முடிவெடுத்துச் செயல்படுகிறுர். அதற்காகவே இந்து வேதாகம பாடசாலேயில், ஆசிரமத்தில், கருகுலத்தில், அருட்பணி விரிவாக்கத் திட்டத்தில், இ.மு.க. எனப்படும் இந்துவேத முன்னேற்றக் கழகத்தில், இ.ம.இ. எனப்படும் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தில் அதிக அளவில் பெண்களேயே பங்கு பெறுமாறும் அறிவித்து வருகிறுர், ஆணேயிட்டு வருகிறுர்.

(5) சித்தர் பிறம்மசத்தியாராகிய நான் இந்த கூட்டத்திற்கு வந்திருக்கின்ற உங்களுக்கு வாழ்த்துரையாக ஒரு சில செய்திகள் கூற விரும்புகின்றேன். இங்குள்ள எல்லோருமே உலகியலாக இல்லறத்தில், குடும்ப வாழ்க்கையில், பற்றுப் பாசங்களோடு, சொந்தபந்தங்களோடு வாழ்க்கை நடத்தி வருபவர்களாகவே இருக்கிறுர்கள். இந்த இல்லற வாழ்க்கையை, இந்த குடும்ப வாழ்க்கையை, அருளுலகிற்குரிய வாழ்க்கையாக, தெய்வீக உலகத்தார் விரும்புகின்ற வாழ்க்கையாக, கடவுளர்கள் போற்றி வரவேற்கின்ற வாழ்க்கையாக இந்துவேதம் மட்டும்தான் கூறுகிறது இந்த உலகில். ஏனென்றுல், இந்த உலகில் உள்ள எல்லா வேதங்களுமே குடும்ப வாழ்க்கையை, இல்லற வாழ்க்கையை துறந்தும், மறந்தும், வெறுத்து ஒதுக்கியும் செயல்பட்டு துறவியாக, சாமியாராக வாழும் வாழ்க்கைதான்

சிறந்த தெய்வீக வாழ்க்கை, சிறந்த அருளுலக வாழ்க்கை, கடவுளுக்குத் தொண்டு செய்யும் விருப்பமான வாழ்க்கை என்று கூறுகின்றன.

ஆனால், ஆதிசிவனார் நமது தாய்மொழியான முத்தமிழ் மொழியில் கூறியுள்ள இந்து வேதத்தில் இல்லற வாழ்க்கை, குடும்ப வாழ்க்கைதான் சிறந்தது எனக் கூறுகிறது. எனவேதான், இந்தப் பேருண்மையை மக்களிடம் எடுத்துக் கூறுவதற்கு பெண்கள்தான் முன்வர வேண்டும் என்று முடிவெடுத்துள்ளார் குருமகா சன்னிதானம், குவலய குருபீடம். அதன்படியே இந்துவேதம்தான் தமிழர்களுடைய எல்லாவகையான இலக்கியங்களுக்கும், இலக்கணங்களுக்கும், வாழ்க்கை நெறிமுறைகளுக்கும் அடிப்படையானது என்ற பேருண்மையை தமிழர்களுக்கு மீண்டும் நினைவுறுத்துவதற்காகவே தமிழ்ப் பெண்கள் முன்வந்துள்ளோம்.

(6) நாம் எல்லோருமே நம் குடும்பத்தில் வாழ்ந்து, இறந்து போன நமது முன்னோர்களை ஆண்டவர்களாக ஏற்றுப் போற்றி மதித்து கும்பிட்டு வருகிறோம். இப்படி ஒவ்வொரு குடும்பத்திலும் தவறாமல் குடும்ப ஆண்டவர்கள் வழிபடப்படுகிறார்கள், பூசை செய்யப்படுகிறார்கள். எல்லோரும் அறிவீர்கள். அதாவது, ஒவ்வொரு குடும்பத்தவர்களும், தங்களது குடும்பத்தில் பிறந்து, இறந்தவர்களில் சிலர் ஆண்டவராகவே மாறி அந்தக் குடும்பத்தவர்களைப் பாதுகாக்கிறார்கள் என்ற பேருண்மை இந்து வேதத்தில் மட்டும்தான் இருக்கிறது.

அதாவது, இந்துவேதப்படி மனிதர்கள் கடவுளர்கள் ஆகிறார்கள், தெய்வங்களாகிறார்கள், தேவதைகளாகிறார்கள், ஆண்டவர்களாகிறார்கள் என்ற பேருண்மை, என்ற கொள்கை, என்ற கருத்து, என்ற செயல்திட்டம் இந்துவேதத்தில்தான் ஒப்புக் கொள்ளப்படுகிறது. இந்த உலகத்தில் வேறு எந்த வேதமும் இதை ஒப்புக் கொள்வதில்லை. அதாவது, இந்த உலகில் உள்ள வேதங்களில் எந்த ஒரு வேதமும் மனிதன் கடவுளாக மாற முடியும் என்று கூறுவதில்லை. ஆனால்,

நமது ஆதிசிவனுர் நமது தாய்மொழியான முத்தமிழ் மொழியில் கூறியுள்ள இந்து வேதத்தில்தான் மனிதன் கடவுளாகலாம் என்ற கருத்து, என்ற பேருண்மை கூறப்பட்டிருக்கிறது! கூறப்பட்டிருக்கிறது!! கூறப்பட்டிருக்கிறது!!! எனவேதான், ஒவ்வொரு குடும்பத்தார்களும் அன்றுடம் தங்களது குடும்ப ஆண்டவர்களை கும்பிட வேண்டும். நமது இந்துக்கள் ஒவ்வொருவரும் நம் குடும்ப வாழ்க்கையில் ஏற்படக் கூடிய ஒவ்வொரு நல்ல காரியத்துக்கும் அல்லது நல்ல செயலுக்கும் நமது குடும்ப ஆண்டவர்களை கட்டாயமாகக் கும்பிட வேண்டும்.

இப்படி ஒவ்வொரு குடும்பத்தவரும் கும்பிடுவதற்கென்று குடும்ப ஆண்டவர்கள் இருக்கின்ருர்கள் என்ற பேருண்மை எந்த ஒரு வேதத்திலும் கிடையாது, எந்த ஒரு மதத்திலும் கிடையாது. இதுதான் இந்து மதத்தின் சிறப்பு, இந்து வேதத்தின் சிறப்பு. இதைப் புரிந்து நம்மவர்கள் எல்லோரும் வேறு மதங்களுக்குச் சென்று மதம் மாறி இருந்தால் கூட நமது குடும்ப ஆண்டவர்களை மறக்காமல் கட்டாயம் கும்பிடல் வேண்டும். அப்படிக் குடும்ப ஆண்டவர்களை கும்பிடாத காரணங்களால்தான் நம் நாட்டில் பெரும்பாலான குடும்பங்கள் பல்வேறு வகையான பாதிப்புகளை பெற்றிருக்கின்றன. அன்றுடம் குடும்ப ஆண்டவர்களை கும்பிடும் குடும்பத்தார்களுக்கு எந்தவிதமான பாதிப்பும், தொல்லையும், துன்பமும் ஏற்படாது என்ற செய்தியை இந்த வாழ்த்துரையில் இந்து வேதத்தின் கருத்தாக உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(7) இதேபோலத்தான் ஒரே குலத்தார்கள், ஒரே பங்காளிகள், ஒரே வட்டாரத்தார்கள், ஒரே தொழிலைச் செய்பவர்கள் குலதெய்வங்களை வழிபடுவது என்ற பழக்கம் இந்துவேதத்தில் தோற்றுவிக்கப் பட்டிருக்கிறது. அதாவது நமது சொந்தக்காரர்களில் ஒரு சில குடும்பத்தின் முன்னேர்களில் சிலர் பத்தி, சத்தி, சித்தி, முத்திகளால் தெய்வங்களாக மாறி வழிபாட்டுக்குரியவர்களாக கோயில் கட்டப்பட்டு

வழிபடப்படுவார்கள். அவர்களில் அந்தக் குடும்பத்தவர்களைச் சேர்ந்தவர் மட்டுமின்றி குலத்தைச் சேர்ந்த அனைவரும் ஆண்டுக்கு ஒரு முறையோ, இருமுறையோ அல்லது குறிப்பிட்ட திருநாள்களிலோ, திருவிழாக்களிலோ அவரவருடைய குலதெய்வங்களின் கோயில்களில் கூடி பலிகள் கொடுத்து பொங்கல் வைத்து, பலகாரங்கள் செய்து வைத்து குலதெய்வங்களைக் கும்பிடுவார்கள். இப்படி குலதெய்வங்களைக் கும்பிடுகின்ற பழக்கம் நம் நாட்டுக்கு வேற்று மதங்கள், அன்னிய நாட்டு மதங்கள் வந்துவிட்டதால் குறைந்து போய்விட்டன.

ஏனென்றால், இந்த உலகத்தில் இந்து வேதத்தைத் தவிர வேறு எந்த ஒரு வேதமும் **குலதெய்வ வழிபாடு**, **குலதெய்வக் கோயில்** என்ற செயல்திட்டத்தை கூறவில்லை! உருவாக்கவில்லை! கூறவில்லை!! உருவாக்கவில்லை!! கூறவில்லை!!! உருவாக்கவில்லை!!! இதுதான் இந்துவேதத்தின் சிறப்பு. நம் நாட்டு மக்கள் பலர் பல்வேறு வகையான பாதிப்புக்களையும், தொல்லைகளையும் பெற்று துன்பப்படுவதற்குக் காரணமே குலதெய்வங்களைக் கும்பிடாததுதான். எனவே, நமது ஆதிசிவனார் நமது தாய்மொழியான முத்தமிழ் மொழியில் கூறி இருக்கின்ற குலதெய்வ வழிபாட்டு முறையை செயலுக்குக் கொண்டு வர வேண்டும். அப்பொழுதுதான் நம்முடைய மக்களுடைய வாழ்க்கை நல்ல நிலையை எய்தும் என்ற செய்தியை இந்து வேத செய்தியாக இங்கு இந்த வாழ்த்துரையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

(8) இங்குக் கூடியிருக்கக் கூடிய பெரியோர்களே! தாய்மார்களே! நம்முடைய ஒவ்வொரு கிராமத்திலும் கிராமத்துக்கென கிராமத்து தேவர் தேவதைகள் இருக்கின்றார்கள். இவர்களுக்கென கோயில்கள் இருக்கின்றன அல்லது குறிப்பிட்ட இடத்தில் கிராமத்து தேவர் தேவதைகளை கும்பிடுகின்ற பழக்கம் இருக்கின்றது. ஆண்டுதோறும் இதே கிராமத்துத் தேவர் தேவதைக்கு ஒவ்வொரு கிராமத்து மக்களும் தங்களுடைய சொந்தக்காரர்களை எல்லாம் வரவழைத்து மிகப் பெரிய அளவில் வாணவேடிக்கையோடு ஒவ்வொரு குடும்பத்தின்

சார்பாகவும் பலிகளைக் கொடுத்து படையல் போட்டு, பலகாரம் செய்து, பொங்கல் வைத்து திருவிழாக் கொண்டாடும் பழக்கம் இருந்து வருகிறது.

இந்த பழக்கம் இந்து வேதத்தில்தான் இருக்கின்றது. அதாவது நமது ஆதிசிவனுர் நமது தாய்மொழியான தமிழ்மொழியில் கூறியுள்ள இந்து வேதத்தில்தான் ஒவ்வொரு கிராமத்திற்கு என்று கிராமத்துத் தேவர் தேவதைகளை உருவாக்கிக் கொடுத்து அந்தந்த கிராமத்து மக்களை பாதுகாப்பதற்கும், அந்தந்த கிராமத்துக்குத் தேவையான எல்லா நல்லவைகளை செய்து தருவதற்கும், அந்தந்த கிராமத்திற்கு வரக்கூடிய எல்லாப் பாதிப்புக்களையும் தடுத்துப் பாதுகாத்திடுவதற்கு என்றும் கிராமத்து தேவர் தேவதைகளை இந்துவேதம்தான் உருவாக்கிக் கொடுத்திருக்கிறது.

ஆனுல், இந்த நாட்டுக்குள் அந்நிய மதங்கள் வந்துவிட்டதால் நமது பெரும்பாலான கிராமத்தவர்கள், கிராமத்துத் தேவர் தேவதைகளை கொண்டாடாமல் விட்டு விட்டார்கள். இதன் காரணமாகத்தான்; கிராமத்தின் வளம், கிராம மக்களின் நலம், கிராம மக்களுடைய ஒற்றுமை, கிராமத்திலுள்ள பயிர்வகைகளின் விளைச்சல், கிராமத்திலுள்ளவர்களின் தொழில் முன்னேற்றம், கிராமத்திலுள்ளவர்களின் உறவுமுறைகள், ... முதலிய அனைத்துமே போதிய பாதுகாப்புக்கள் இல்லாமல்; போதிய அருளுலக சத்திகளின் துணையில்லாமல்; பெருமளவில் நலிந்து, மெலிந்து, காரணகாரியமில்லாமல் சிதைந்து, சீரழிந்து, வளம்குன்றி, ஒற்றுமையிழந்து குடும்பப் பற்று பாசங்களை இழந்து; சொந்தபந்த ஒற்றுமைகள் பாதிக்கப்பட்டு, பல கிராமங்கள் பாழடைந்து போகவும், பலர் கிராமத்தை வெறுத்து, மறுத்து, எதிர்த்து, பகைத்து, நகைத்து, கிராமத்தையே காலி செய்து விட்டு சென்றிட்ட, சென்று கொண்டிருக்கின்ற நிலைகள் அதிகமாகி விட்டன! அதிகமாகி விட்டன!! அதிகமாகி விட்டன!!! அதிகமாகி வருகின்றன! அதிகமாகிக் கொண்டே வருகின்றன!

இப்பாதிப்புகளை உடனடியாகத் தடுத்து நிறுத்தாவிட்டால், வருங்காலத்தில் பெரும்பாலான கிராமங்கள் பாழடைந்து இருந்த இடமே தெரியாமல் போய்விட நேரிடும். இதைத் தடுக்கின்ற வழிவகைகள், தடுக்கின்ற முயற்சிகளுக்குரிய பயிற்சிகள்; நமது ஆதிசிவனுர் நமது தாய்மொழியான தமிழ்மொழியில் அருளியுள்ள இந்து வேதத்தில்தான் இருக்கின்றன! இந்துவேதத்தில்தான் இருக்கின்றன!! இந்து வேதத்தில்தான் இருக்கின்றன!!! அதாவது இந்த உலகில் தோன்றியுள்ள எந்த வேதத்திலுமே இந்தக் கருத்துக்கள் இல்லை. 'ஒவ்வொரு கிராமத்திற்கான தனிப்பட்ட, வெவ்வேறுன தேவர் தேவதைகள் இருக்கின்றுர்கள். ஒரு கிராமத்தினுடைய தேவர் தேவதைகளுக்கும், மற்ற கிராமத்திலுள்ள தேவர் தேவதைகளுக்கும் தொடர்பில்லை. ஒவ்வொரு கிராமத்தையும் பாதுகாப்பதற்கென்று இந்த உலகத்தின் தோற்றக் காலத்திலேயே தேவர் தேவதைகள் நியமிக்கப் பட்டிருக்கிறுர்கள்' என்று இந்துவேதம் கூறுகிறது.

புதிதாகத் தோற்றுவிக்கப்படுகின்ற கிராமங்களிலும் அங்கு வந்து குடியேறுகின்ற மக்கள்; தங்கள் தங்கள் கிராமத்து தேவர் தேவதைகள் கோயில்களிலிருந்தும், குலதெய்வங்களின் கோயில்களிலிருந்தும், குடும்ப ஆண்டவர்களின் கோயில்களிலிருந்தும் **"பிடிமண்"** எடுத்து வந்து புதிய கிராமங்களில் வைத்து புதிதாகக் கோயிலைக் கட்டிக் கொண்டால்; அந்த இடத்திற்கு மூலக் கோயில்களிலிருந்து தேவர் தேவதைகள், தெய்வங்கள், ஆண்டவர்கள் புதிய கிராமத்திற்கு வந்து மக்களுக்குப் பாதுகாப்பு தருவார்கள், அருள்நலம் தருவார்கள் என்று இந்து வேதம் மிகத் தெளிவாகக் கூறுகிறது. இது போன்று ஒவ்வொரு கிராமத்திற்கும் அருளுலகப் பாதுகாப்புகள், அருட்சத்தி வழங்கல் ஏற்படுவதற்குரிய வழிவகைகள் இந்த உலகில் தோன்றியுள்ள வேறு எந்த வேதத்திலும் இல்லை.

எனவேதான், தமிழர்களின் கடவுளான ஆதிசிவனுர், தமிழ்மொழியில் அருளியுள்ள இந்து வேதத்தின் மூலம்தான் தமிழர்கள் வளப்பட

முடியும், நலப்பட முடியும், வலிமைப்பட முடியும், ஒற்றுமைப்பட முடியும், ஒன்றுதிரள முடியும், தன்மானத்தோடு வாழ முடியும், தன்னம்பிக்கையோடு வாழ முடியும்; இன உணர்வோடு வாழ முடியும்; மொழியுணர்வோடு வாழ முடியும்; பண்பாட்டுப் பிடிப்புணர்வோடு வாழ முடியும்; தமிழ் நாகரிகத்தில் நம்பிக்கையோடும், ஈடுபாட்டோடும் வாழ முடியும்; தமிழ்க் குடும்பமாக ஒற்றுமையோடு, பற்றுப் பாசத்தோடு அமைதியாக, நிம்மதியாக வாழ முடியும்; தமிழ்க் குடும்பங்கள் ஒன்றோடு ஒன்று இணைந்து **'தமிழர் சமுதாயம்'** என்ற கட்டமைப்புக்குரிய நிறுவன நிர்வாகங்கள் அனைத்தையும் போற்றிப் பேணிப் பாதுகாத்திடுவதற்குரிய நிலைமைகள் உருவாகிடும்.

அப்படி இந்து வேதத்தால் கிராமத்துத் தேவர் தேவதைகளை வழிபடுவதன் மூலம் தமிழ்க் குடும்பங்கள் ஒற்றுமையோடு வடிவமைப்பு பெற்று தமிழ்ச் சமுதாயம் நல்ல வலிமையான கட்டமைப்பு பெற்று தமிழருடைய தனிமனித வாழ்வும், குடும்ப வாழ்வும், சமுதாய வாழ்வும் சிறப்படைவதன் மூலம்தான், செம்மைப்படுவதன் மூலம்தான், வலிமைப்படுவதன் மூலம்தான், வளப்படுவதன் மூலம்தான்; தமிழருடைய அரசியல் வாழ்வில் உள்ள காலி நிலைகள், கூலி நிலைகள், போலி நிலைகள், அந்நியரின் ஆதிக்க நிலைகள், தமிழரின் பிச்சைக்கார நிலைகள், தமிழரின் அடிமை நிலைகள், தமிழரின் மிடிமை நிலைகள், அனாதை நிலைகள், அகதி நிலைகள், நாடோடி நிலைகள், இலம்பாடி நிலைகள், ஏமாளி நிலைகள், கோமாளி நிலைகள், அப்பாவி நிலைகள் ... முதலிய கேவலமான அவலமான நிலைகள் அனைத்தும் தூரோடு, வேரோடு அகற்றப்பட்டிடும்! அகற்றப்பட்டிடும்!! அகற்றப்பட்டிடும்!!! அப்படி

- ♦ 'தமிழர்கள் விடுதலையடைய வேண்டும்';
- ♦ 'தமிழர்கள் உரிமை பெற வேண்டும்';
- ♦ 'தமிழர்கள் பெருமை பெற வேண்டும்';
- ♦ 'தமிழர்கள் இன மான உணர்வு பெற வேண்டும்';

- ‘தமிழர்கள் தன்மான உணர்வு பெற வேண்டும்’;
- ‘தமிழர்கள் தன்னம்பிக்கை உணர்வு பெற வேண்டும்’;
- ‘தமிழர்கள் வளமான வலிமையான வாழ்வு வாழ வேண்டும்’;
- ‘தமிழர்களின் ஆட்சி மீட்சி பெற வேண்டும்’;
- ‘தமிழர்கள் மலர்ச்சியும், மறுமலர்ச்சியும் பெற வேண்டும்’;
- ‘தமிழர்கள் வளர்ச்சியும், வளவளர்ச்சியும் பெற வேண்டும்’;
- ‘தமிழர்களின் செழிச்சி உயர்ச்சி பெற வேண்டும்’; .....

என்று தமிழர்களின் மீட்சிப் பணிக்காக தமிழர்களுக்கு உரிய பயிற்சிகளை இந்து வேதத்தின் மூலம் வழங்கிடும் முயற்சியைத்தான் இங்கு எழுந்தருளியுள்ள பதினெண்சித்தர் மடாதிபதி, குவலய குருபீடம், ஞாலகுரு, குருமகா சன்னிதானம், அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார் அவர்கள் எள்முனையளவு கூட தளர்ச்சியோ, அயர்ச்சியோ இன்றி தொடர்ந்து முயற்சி செய்து வருகிறார்.

அந்த முயற்சிகளின் விளைவாகக் கருகுலம், திருகுலம், தருகுலம், குருகுலம், ஆசிரமம், **இந்துவேத முன்னேற்றக் கழகம்** (இ.மு.க.), **இந்து மறுமலர்ச்சி இயக்கம்** (இ.ம.இ.), **அருட்பணி விரிவாக்கத் திட்டம்** (அ.வி.தி.) முதலியவைகள் தோற்றுவிக்கப்பட்டு; ஒவ்வொரு குடும்பத்தார்களுக்கும், அவர்களுடைய முன்னோர்கள் கும்பிட்ட குடும்ப ஆண்டவர்களையும்; ஒவ்வொரு குலத்தார்களுக்கும் அவர்களுடைய குல தெய்வங்களையும்; ஒவ்வொரு கிராமத்தவர்களுக்கும் அவர்களுடைய கிராமத்துத் தேவர் தேவதைகளையும் கண்டுபிடித்துத் தருவதற்காக ஓமங்கள், ஓகங்கள், யாகங்கள், யக்ஞங்கள், வேள்விகள் முதலிய ஐந்தையும் தேவைக்கேற்ப ஒவ்வொரு வீட்டிலும், தெருவிலும், கிராமப் பொது இடங்களிலும், கோயில்களிலும் செய்திடும் பணிகளைத் துவக்கியுள்ளார் இந்துமதத்தின் தலைமை ஆச்சாரியக் குருபீடம், அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார் அவர்கள்.

அந்த மாபெரும் பணியின் ஒரு பகுதியாகத்தான் இன்றைக்கு திருச்சி மாவட்ட திருவெள்ளறையில் இந்தப் பொதுக் கூட்டத்தில்

சித்தர் யாககணநாதர் என்ற பெண்ணும், சித்தர் பிறம்மசத்தியார் என்ற நானும் ஆக இரண்டு பெண்கள் சொற்பொழிவாற்றுகிறோம். பெண்கள்தானே பேசுகிறார்கள் என்று யாரும் கவனம் செலுத்தாமல் இருந்து விடாதீர்கள். நாங்களெல்லாம் இந்து வேதாகம பாடசாலையில் தயாரானவர்கள், படித்துக் கொண்டிருப்பவர்கள். எனவே, நாங்கள் கூறுகின்ற கருத்துக்களை நீங்கள் எல்லோரும் கேட்டு பிறருக்கும் சொல்ல வேண்டும்.

நாங்கள் கூறுகின்ற கருத்துக்களின் தொடர்பாக உள்ள பல கருத்துக்களும், செய்திகளும் பதினெண்சித்தர் மடத்தால் அச்சிடப்பட்டு புத்தகங்களாக இங்கு விற்கப்படுகின்றன. அவற்றையும் வாங்கிப் பயனடையுங்கள்.

(9) இப்பொழுது நான் இறுதியாக உங்களுக்குக் கூறப் போகிற கருத்துத்தான் மிகவும் சிக்கலான கருத்து, போராட்டமான கருத்து, புரட்சியான கருத்து. ஆனால், இந்தக் கருத்து 'இருக்கு வேதத்தில் காண்டம் - 5, மண்டலம் - 17, நாள் உரைக்கோவை வாசகம் - 15இலும்', 'அசுர வேதத்தில் காண்டம் - 5, மண்டலம் - 17, நாள்வாக்கு - 15இலும்', 'அதர்வான வேதத்தில் காண்டம் - 5, மண்டலம் - 17, நாள் வாக்கியம் -15இலும்', 'யாம வேதத்தில் காண்டம் - 5, மண்டலம் - 17, நாள் வாசகம் - 17இலும்' கூறப்பட்ட கருத்தாகும்.

இக்கருத்து மிகத் தெளிவாக பல நூறாயிரக்கணக்கான அறிக்கைகளாகத் தொடர்ந்து அச்சடிக்கப்பட்டு தமிழ்நாடு முழுவதும் பல ஆண்டுகளாகக் கொடுக்கப்பட்டு வருகின்றன. இருந்த போதிலும், அந்நிய நாட்டு மதங்களின் முயற்சிகளால் பதினெண்சித்தர் மடத்தின் முயற்சிகள் அனைத்தும் உரிய பயன்களை பெரிய அளவில் தர முடியாமல் போய்விட்டது! போய்விட்டது!! போய்விட்டது!!!

(10) எனவேதான்! எனவேதான்!! எனவேதான்!!! பதினெண்சித்தர் மடத்திற்குரிய வேதாகமப் பாடசாலையில், ஆசிரமத்தில்; குருகுலம்,

தருகுலம், திருகுலம், கருகுலம் முதலியவற்றில் தயாராகி வரும் 48 வகைப்பட்ட அருட்பட்டங்களைப் பெற்ற; அதாவது மடாதிபதி, பீடாதிபதி, சன்னிதானம், ஆதீனம், தம்பிரான், பண்டாரம், பண்டார சந்நதி, பண்டார சந்நிதி, ஆச்சாரியார், வேத கணபாடிகள், ... என்பன போன்ற அருட்பட்டங்களைப் பெற்றவர்கள் தமிழ்நாடு முழுவதும் நூற்றுக்கணக்கிலும், ஆயிரக்கணக்கிலும் இந்துவேதக் கருத்துக்களைப் பரப்பிட, வளர்த்திட, செயலாக்கிடப் புறப்பட்டுள்ளார்கள்! புறப்பட்டுள்ளார்கள்!! புறப்பட்டுள்ளார்கள்!!! அவர்களின் சாதனையாகத்தான் இன்றைக்கு திருவெள்ளறையில் இந்தப் பொதுக் கூட்டம் நடைபெறுகிறது.

(11) நமது ஆதிசிவனார் நமது தாய்மொழியான தமிழ்மொழியில் அருளியுள்ள இந்து வேதத்தில் "மொழியின் அடிப்படையில் உருவாகின்ற இனத்தார்கள் வாழுகின்ற பெரிய பகுதிதான் நாடு ஆகும். எனவே, இந்த நாட்டுக்குரிய கடவுள்கள் இந்த நாடு சார்ந்த மொழிக்குரிய கடவுள்கள், இந்த மொழி சார்ந்த இனத்துக்குரிய கடவுள்கள் அவரவர் நாட்டவர்களை மட்டுமே காப்பாற்றுவார்கள். அதாவது ஒரு நாட்டுக்குரிய கடவுள்கள், அந்த நாட்டவர்களை மட்டும்தான் காப்பாற்றுவார்கள். வேற்று நாட்டார்களையோ, மாற்று நாட்டார்களையோ காப்பாற்ற மாட்டார்கள்! காப்பாற்ற மாட்டார்கள்!! காப்பாற்ற மாட்டார்கள்!!! காப்பாற்றவே மாட்டார்கள்!!!! இதேபோல ஓர் இனத்துக்குரிய கடவுள்கள் அந்த இனத்தவர்களை மட்டும்தான் காப்பாற்றுவார்களே தவிர வேற்று இனத்தவர்களையோ, மாற்று இனத்தவர்களையோ காப்பாற்ற மாட்டார்கள்! காப்பாற்ற மாட்டார்கள்!! காப்பாற்ற மாட்டார்கள்!!! காப்பாற்றவே மாட்டார்கள்!!!! இதேபோல், ஒரு மொழிக்குரிய கடவுள்கள் அந்த மொழிக்குரியவர்களை மட்டும்தான் காப்பாற்றுவார்களே தவிர வேற்று மொழியினர்களையோ, மாற்று மொழியினர்களையோ காப்பாற்ற மாட்டார்கள்! காப்பாற்ற மாட்டார்கள்!!

காப்பாற்ற மாட்டார்கள்!!! காப்பாற்றவே மாட்டார்கள்!!!!” என்று தெள்ளத் தெளிவாக விளக்கியுள்ளார்.

(12) அதாவது, அதாவது, அதாவது நமது ஆதிசிவனார் நமது தாய்மொழியான தமிழ்மொழியில் அருளியுள்ள இருக்கு வேதம், அசுர வேதம், அதர்வான வேதம், யாம வேதம் ஆகிய நான்கு வேதங்களும் மிகமிகத் தெள்ளத் தெளிவாகத் திட்டவட்டமாக வெட்டவெளிச்சமாக மூன்று கருத்துக்களை வரையறை செய்து அழுத்தந் திருத்தமாக, ஆணித்தரமாகக் கூறுகின்றன! கூறுகின்றன!! கூறுகின்றன!!! இவற்றை **<u>தமிழர்களாக உள்ள இந்துக்களும், இந்துக்களாக உள்ள தமிழர்களும்</u>** தெரிந்து புரிந்து ஏற்றுச் செயல்படுத்தாத காரணத்தினால்தான் தமிழ்நாடும், தமிழ்மொழியும், தமிழினமும் எல்லாவகையான கேடுகளையும், இழிவு அழிவுகளையும், துன்பங்களையும், தொல்லைகளையும், அடக்க முடக்கங்களையும் பெற்றிட்டன! பெற்றிட்டன!! பெற்றிட்டன!!! பெற்று வருகின்றன! பெற்று வருகின்றன!! பெற்று வருகின்றன!!!

எனவே! எனவே!! எனவே!!! எனவேதான் இந்து வேதாகம பாடசாலையின் மாணவர்களும், மாணவிகளும் இந்து வேதத்தின் உயிர்நாடியான மூன்று கருத்துக்களையும் மீண்டும் மீண்டும் தெளிவுபடுத்தி வலியுறுத்திக் கூற முன்வந்திருக்கிறோம்! மீண்டும் மீண்டும் தெளிவுபடுத்தி வலியுறுத்திக் கூற முன்வந்திருக்கிறோம்!! மீண்டும் மீண்டும் தெளிவுபடுத்தி வலியுறுத்திக் கூற முன்வந்திருக்கிறோம்!!! அதாவது, நமது ஆதிசிவனார் நமது தாய்மொழியான தமிழ்மொழியில் நமக்கும், உலக மக்களுக்கும் உரிய செய்தியாக:-

(i) “ஒவ்வொரு மொழியினரும் அவரவர் மொழியிலுள்ள மந்திரங்களைச் சொல்லி; அவரவர்கள் மொழிக்குரிய, மொழியைப் பேசக்கூடிய, மொழியைத் தெரிந்த கடவுள்களை மட்டுமே கும்பிட வேண்டும்; கும்பிட்டாக வேண்டும். அப்பொழுதுதான் பயன் ஏற்படும்! பயன் ஏற்படும்!! பயன் ஏற்படும்!!! பயன் ஏற்பட்டிடும்!”

(ii) “ஒவ்வோர் இனத்தவரும் அவரவர் இனத்திற்குரிய கடவுள்களை மட்டுமே கும்பிட வேண்டும்; கும்பிட்டாக வேண்டும். அப்பொழுதுதான் பயன் ஏற்படும்! பயன் ஏற்படும்!! பயன் ஏற்படும்!!! பயன் ஏற்பட்டிடும்!”

(iii) ஒவ்வொரு நாட்டவரும் அவரவர் நாட்டு எல்லைக்குள் இருக்கின்ற; அவரவர் நாட்டுப் பண்பாட்டையும், நாகரிகத்தையும் ஏற்றுக் கொள்கின்ற கடவுள்களை மட்டுமே கும்பிட வேண்டும்; கும்பிட்டாக வேண்டும். அப்பொழுதுதான் உரிய பயன் ஏற்படும்! உரிய பயன் ஏற்படும்!! உரிய பயன் ஏற்படும்!!! உரிய பயன் ஏற்பட்டிடும்!” ....

என்ற இந்த மூன்று கருத்துக்களைக் கூறி என் சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம். என் வாழ்த்துரை இத்துடன் நிறைவைப் பெறுகிறது.

<u>நகல் தயாரிப்பு:</u>

சித்தர் தேரையரின் மூத்த மகள், அருள்மிகு ஆத்தாள் தேவி தில்லைக்காளியம்மன் சன்னிதானம், சித்தர் நான்வேதமுடையார்.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல் கையெழுத்துப் பிறதியாக இருந்தது.//**

குருவே துணை!

# அருட்படை திரட்டி அருளாட்சி அமைக்கும் பணி

பொன்னேரி,
23-01-1995.

பெறுநர்:
இந்துவேதம் பரப்பும் நாயகம்,
திரு த. கேசவன் B.Com.,
மதுரை - 1.

அன்பு சித்தர் வேதகணநாதர் அவர்கள் சமூகத்திற்கு சித்தர் அம்பலக்கூத்தர் இரா. சீனிவாசன், குருதேவர் அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்களின் திருவுளக் கருத்தை அறிந்து வரையும் மடல்.

1. குருவருளால் யாவும் நலமாகட்டும்! வெற்றியாகட்டும்!! உண்மையாகட்டும்!!!

2. குருதேவர் தங்களுக்கு என்ன எழுதுவது? எப்படி எழுதுவது? என்பதைப் பற்றி பல கோணங்களில் சிந்தித்தபடி உள்ளார். கடலைத் தாண்டி இலங்கைக்குச் செல்லும் வல்லமை பெற்றிருந்த அநுமாருக்கு சுக்கிரீவன் அவருடைய ஆற்றலை எடுத்துக் கூறி ஆர்வமூட்டிய பிறகுதான் அநுமாரால் கடலைத் தாண்டி இலங்கைக்குச் செல்ல முடிந்தது. அதைப் போலவே, மிகுதியான சொந்தக்காரர்களையும், நண்பர்களையும், உற்றார் உறவினர்களையும், இனத்தார்களையும், இளைஞர் கூட்டத்தையும் உடைய தாங்கள்; செயல் தேக்கமுற்று, மயக்கமுற்று,

தயக்கமுற்று, கலங்கி, வருந்தி, மோனத்தை நாடுவது ஏன்? ஏன்? ஏன்?

3. உங்களுக்குக் கிடைத்துள்ள வசதிவாய்ப்புக்களை நெறிமுறைப்படுத்தி, நன்கு திட்டமிட்டு, ஒரு மாபெரும் கடமையை ஆற்றும் தலைவனுக்குரிய தாராளச் சிந்தையையும், துணிவுள்ள நெஞ்சத்தையும்; எல்லோரையுமே தனக்குரியவர்களாக ஆக்கிக் கொள்ளும் உணர்வுத் திறமையையும் உருவாக்கிக் கொண்டிட்டால் போதும்! போதும்! போதும்! அனைத்தையுமே சாதித்திடும் மாவீரராகி விடுவீர்கள்! மாவீரராகி விடுவீர்கள்! மாவீரராகி விடுவீர்கள்! இதற்காகத்தான் குருபீடம் தங்களை தனியாக வரச் சொல்லி ஒன்றிரண்டு நாட்கள் தங்களை, தம்மோடு தங்க வைத்து தங்களோடு கருத்துப் பரிமாற்றக் கலந்துரையாடல் நிகழ்த்த விரும்புகிறார்.

4. இது முதல் தங்கள் கடையிலேயே அனைவரையும் இரவில் நெடுநேரம் தங்க வைத்து உரையாடுவதில் சிறிது மாற்றம் செய்து கொள்ளுங்கள். அதாவது, மதுரை மாநகருக்குள்; இப்பொழுது, நமக்கு அறிமுகமாயிருக்கக் கூடிய புதியவர்களையெல்லாம்; இரவில் சென்று நம்மவர்கள் ஒருவர் இருவராக சந்தித்து உரையாடுவது என்ற புதிய செயல்திட்டத்தை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

5. இதற்காக, முதல் நாளிலேயோ அல்லது மாலையிலோ இரவு 9 (அ) 10 மணியளவிலோ நம்மவர்களையெல்லாம் தங்கள் கடையில் ஒன்று கூடியவுடன் யார் யாரைச் சந்திப்பது என்று பட்டியலிட்டுக் கொண்டுவிட வேண்டும். அதன்பிறகு, யார்யாரை யார்யார் சென்று சந்திப்பது என்று முடிவு செய்து கொள்ள வேண்டும். அப்படிச் சந்திப்பவர்கள், எதைப்பற்றி எவ்வளவு நேரம் உரையாடுவது என்று மிகத் தெளிவாக வரையறை செய்து கொள்ள வேண்டும்.

குறிப்பு:-

(i) நம்மவர்கள், பொதுவாக, யாரைச் சந்தித்தாலும் ஏராளமான செய்திகளை நம்மைப் பற்றியே கூறுபவர்களாக ஆகி விடுகிறார்கள். இதை மாற்றிக் கொள்ள வேண்டும்.

(ii) அதாவது, நம்மவர்கள், யாருடன் உரையாடினாலும் அவர்கள் யார்? அவர்களைப் பற்றிய விவரங்கள் என்ன? அவருடைய அக்கறை, ஆர்வம், ஈடுபாடு எவையெவற்றில் இருக்கின்றன? அவர் நமக்குப் பயன்படுவாரா? என்பதையெல்லாம் முழுமையாகத் தெரிந்து அவற்றிற்கேற்பவே உரையாட வேண்டும்.

(iii) நாம், சந்திப்பவரை விரைவில் எடைபோட்டு, நம்முடைய எந்த நிறுவன நிர்வாகத்தில் அவர் செயல்பட முடியும்? அவர் உடல் உழைப்பைத் தருவாரா? அல்லது பொருளுதவி தருவாரா? அல்லது அவர் தமது வசதி வாய்ப்புகளை நமக்குச் சாதகமாகப் பயன்படுத்துவாரா? என்பதை எடையிட்டு அதற்கேற்ப அவரிடம் உரையாட வேண்டும்.

6. இந்துவேதம் பரப்பும் நாயகம் அவர்களே! நமது குவலய குருபீடம் ஊர் ஊராக, கிராமம் கிராமமாகத் தங்கி; தெருத் தெருவாக நடந்தும், கோயில் கோயிலாக பூசை செய்து அருளுரையாற்றியும்; கல்வி நிறுவனங்கள், கலை நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள், இலக்கிய நிறுவனங்கள், சமய சமுதாய அரசியல் நிறுவனங்கள், .... எனப்படும் அனைத்து வகைப்பட்ட நிறுவன நிர்வாகங்களிலும் உரையாடலாகவோ அல்லது சொற்பொழிவாகவோ <u>தமிழினம், தமிழ்மொழி, தமிழ்நாடு என்ற முக்கோண சத்திகளின் செயலாக்கம்தான்! சாதனைதான்! போதனைதான்! இம்மண்ணுலகையே காக்கக் கூடிய இந்துவேதத்தையும், இந்துமதத்தையும் பிறப்பித்திருக்கின்றன! அருளியிருக்கின்றன, வளர்த்துக் காத்து வருகின்றன!</u> என்ற பேருண்மையை விளக்கியுரைக்க விரும்புகிறது.

7. இப்படிச் செயல்படுவதன் மூலமாவது இருண்டு, மிரண்டு, அரண்டு, வறண்டு, துவண்டு கிடக்கின்ற <u>தமிழர்கள்</u>, <u>தமிழர்களாக உள்ள இந்துக்கள்</u>, <u>இந்துக்களாக உள்ள தமிழர்கள்</u>, <u>இந்துக்கள்</u> எனும் நான்கு வகைப்பட்டவர்களையும் சிந்திக்கச் செய்ய முடியும் என்று நம்புகிறோம்.

8. இம்முயற்சியில் குருதேவருக்கு முழுமையான வெற்றி கிடைக்கும் என்பதில் ஐயமில்லை. ஏனென்றால், இன்றைக்கு நாட்டு நடப்பில் ஏறத்தாழ எவருக்குமே இந்துவேதத்தைப் பற்றி முழுமையாகத் தெரியாது. இதேபோல், யாருக்குமே இந்துமத வரலாறு புரியாது. இதேபோல் எவருக்குமே கோயில்கள், கடவுள்கள், பூசைகள், பூசாறிகள், சடங்குகள், சாத்திரங்கள், திருநாள்கள், திருவிழாக்கள், முடிகயிறு, தாயத்து, சக்கரம், உருத்திராக்கம் முதலியவைகளைப் பற்றி முறையான எதுவுமே தெரியாது. இன்னும் சொல்லப்போனால், இன்றைக்கு இந்துமதத்தை எதிர்த்து கேள்வி கேட்கும் நாத்திகர்களுக்கும், வேற்று மதத்தவர்களுக்கும் பதில் சொல்லப் பயப்படுகிறவர்கள், திக்குமுக்காடுபவர்கள்தான் பெரும்பாலும் இந்துமத நிறுவன நிர்வாகங்களில் இருக்கிறார்கள். இதைவிடக் கேவலம் என்னவென்றால்! கொடுமை என்னவென்றால்! இந்துமதத்தில் ஆழ்ந்த ஈடுபாடுடைய மெய்யான இந்துக்களின் ஐயங்களுக்கும், சந்தேகங்களுக்கும் விடை கூறுவதற்குக் கூட இந்துமதத்தின் பெயரால் வாழ்ந்து கொண்டிருக்கக் கூடிய எவருக்குமே தெளிவில்லை, துணிவில்லை.... அக்கறையில்லை, அக்கறையில்லை, அக்கறையில்லை, அக்கறையில்லவே இல்லை.

9. இவற்றையெல்லாம் நினைவில் கொண்டுதான்; நமது குவலய குருபீடம், ஆதிசிவனாரின் நேரடிக் குருபாரம்பரிய வாரிசு, அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்கள்; தம்மைச் சந்திக்க மிகப் பெரிய கூட்டங்கள் கூடாவிட்டாலும், ஊர் ஊருக்கு, கோயில் கோயிலுக்கு, தெருத் தெருவுக்கு, நிறுவன நிறுவனத்திற்கு ... விரல் விட்டு எண்ணக் கூடிய அளவிற்குச் சிலபேர் சந்தித்தால் போதும்! சிலபேர் சந்தித்தால் போதும்! சிலபேர் சந்தித்தால் போதும்! .... அவர்களுடைய இல்லங்களையும், உள்ளங்களையும், உற்றார் உறவினர்களையும், **"தமிழ்மொழி, தமிழினம், தமிழ்நாடு தோற்றுவித்து வளர்த்துக் காத்து வருகின்ற இந்துவேதத்தையும், இந்துமதத்தையும்"** ஆட்சி மீட்சி பெறச் செய்யக் கூடியவர்களாக உருவாக்கிட

முடியும், உருவாக்கிட முடியும், உருவாக்கிட முடியும்.... என்று நம்புகிருர்.

10. குருபீடத்தின் இந்த நம்பிக்கைக்காக செயல்படக் கூடியவர்கள், தன்னம்பிக்கையுடையவர்களாகவும்; தமிழ்மொழி, தமிழினம், தமிழ்நாடு என்ற மூன்றின் மீதும் அளப்பரிய பற்றும் பாசமும் நிலையாக உடையவர்களாகவும்; இந்துவேதம் பற்றியும், இந்துமதம் பற்றியும் முறையான, நிறைவான, தெளிவான, அறிவுடையவர்களாகவும்; எக்காரணம் பற்றியும் உணர்வு வயப்பட்டு விடாமல் பொறுப்புடனும், பொறுமையுடனும், நிதானத்துடனும் உரையாடுகின்ற தரம், திரம், திறம் பெற்றவர்களாகவும் இருக்க வேண்டும்.

11. இவற்றிற்கெல்லாம் மேலாக, நம்மவர்களில் யாருமே மறந்தோ அல்லது உணர்வு வயப்பட்டோ வேற்று மதத்தவர்களையோ, மாற்று வேதத்தவர்களையோ, இந்துமதப் போலிகளையோ, அந்நிய மதத்தவர்களின் கங்காணிகளையோ, கைக்கூலிகளையோ, அறியாமை மிகுந்த அப்பாவி நாத்திகர்களையோ .... மனம் புண்படும்படி விமரிசித்து விடக் கூடாது, கூடாது, கூடாது, கூடவே கூடாது.

12. இதற்காகத்தான், இந்துவேத நாயகம், இந்துமதத் தந்தை, எல்லாம் வல்ல சித்தர், பரபிறம்மம், கருமூலப் பண்டாரம், கருகுல ஆதீனம், அறுதிஆதி கடந்த தம்பிரான் அடிகளார், அந்தணர் அண்ணல், ஞாறுச்சாரியார் அவர்கள்,

(i) தமது தந்தையார் 1936இல் வெளியிட்ட '**தமிழினத் தாழ்ச்சி நிலை தொடர்ச்சி நிலையாவது ஏன்**' என்ற நூலின் முதல் பாகத்தை மட்டுமே அச்சிட்டு வெளியிட்டு விட்டு இரண்டாம் பாகத்தை அப்படியே வைத்திருக்கிருர்.

குறிப்பு:- இந்த முதல் பாகத்தைக் கூட பொது இடங்களில் விற்கக் கூடாது என்று தடை விதித்திருக்கிருர். அதாவது, நம்மால் முழுக்க பக்குவமுடையவர்கள் என்று நம்பக் கூடியவர்களுக்கு

மட்டுமே இப்புத்தகத்தைத் தர வேண்டும் என்ற விதியை உருவாக்கியிருக்கிறார்.

(ii) நம்மவர்கள் அனைவரும் இரவு பகலாக அயராது பாடுபட்டும் இலட்ச ரூபாய்க்கு மேல் நிதி திரட்டி 1991 செப்டம்பர் 28, 29 தேதிகளில் நமது அருளாட்சி நாயகம் தாத்தா காவிரியாற்றங்கரைக் கருவூரார் எழுந்தருளியுள்ள தஞ்சை மாநகரில் வெளியிட்ட '**இந்து வேதம்**' என்ற நூலைக் கூட (2000) இரண்டாயிரத்துக்கு மேல் அச்சிடாமல் தமிழ்நாட்டிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட இந்துமதப் பத்தியாளர்களுக்கு மட்டுமே வழங்குமாறு எச்சரிக்கை விடுத்துக் கொண்டார்.

(iii) அடுத்து ஒருசில புத்தகங்களை வெளியிட்டு விட்டு, '**இந்துவேத சிந்தனைகள்**' என்ற தலைப்பில் நல்ல ஒரு பெரிய நூலை அச்சிட்டு எல்லா இடங்களிலும் விற்கும்படிச் செய்தார்.

13. இப்படியெல்லாம் முன்னெச்சரிக்கையோடு செயல்பட்டும் கூட அநேகமாக, '.... நம்மவர்களும் தயாராகவில்லை, மற்றவர்களும் தயாராகவில்லை' என்ற நிலைதான் கிடைத்திட்டது என்று வருந்தினார் குருதேவர், குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார். எனவேதான், ஞானவேந்தர், நிறையக்ஞர், அருளாணை வழங்கு குருவாணை ஓலை நாயகம், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்கள்; அருட்படை திரட்டி அருளாட்சி அமைக்கும் பணிக்காக; ..... இதுவரை தமக்குக் கிடைத்துள்ளவர்களை அருட்படைத் தலைவர்களாக, அருட்சேனைத் தளபதிகளாக, அருட்போர் வியூக நாயகங்களாக, மக்களைத் திரட்டும் மாதண்டநாயகங்களாக..... உருவாக்குவதற்காக தமது வாதத்தை, அருளுரையை, அறிவுரையை, அருளார்ந்த அறிவுரையை, அறிவார்ந்த அருளுரையை, செயல்திட்டங்களை உளவியல் தத்துவ முறைப்படி எழுதி .... இயந்திரத்தில் கையெழுத்துப் பிறதி நகல்களாகத் தயாரித்து;

சுமார் 150 புத்தகங்களாக மட்டும் நன்கு தயாரித்து (Bind செய்து) ரூ.35/- விலையில் வழங்கிட முன்வந்துள்ளார்.

இவற்றில், 25ஐ அண்மையில் கூடிய; 1995 சனவரி 1 முதல் 5 வரை தஞ்சையில் கூடிய இந்துவேத மாநாட்டில் வழங்கினர். ஓர் 25ஐ சித்தர் தேரையரும், சித்தர் சட்டநாதரும் கன்னியாகுமரி வரை எடுத்துச் சென்று தேர்ந்தெடுக்கப்பட்ட இந்துக்களுக்கு அன்பளிப்பாகவோ அல்லது காணிக்கை பெற்றுக் கொண்டோ வழங்குமாறு ஆணையிட்டுள்ளார். இப்பொழுது சித்தர் அம்பலக் கூத்தராகிய எம்மிடம் ஓர் 25 நூல்களைக் கொடுத்து சனவரி 25 முதல் சில நாட்கள் தங்களைப் போன்றுள்ள ஒவ்வொருவரையும் சந்தித்து; இந்த '**ஆதிசிவனார் தமிழில் அருளியுள்ள இந்துவேதத்தைத் தெரிந்து கொள்ளுங்கள்! இந்துமதத்தைப் புரிந்து கொள்ளுங்கள்!**' என்ற நூலை வழங்கி "நம்மவர்கள் எல்லோரும் கட்டாயமாக இந்த மார்ச் மாதம் குருதேவர் கன்னியாகுமரி மாவட்டம், மண்டைக்காடு பகவதியம்மன் திருவிழாவில் கலந்து கொள்வதற்காக, அனைவரையும் சந்திப்பதற்குள்; நன்கு படித்து; இப்புத்தக வாசகங்களை, கருத்துக்களை எளிதாக எடுத்துக் கூறி உரையாடும் ஆற்றலையும், சொற்பொழிவாற்றும் திறமையையும் பெற்றிட வேண்டும்" என்று அறிவிப்புச் செய்யுமாறு குருவாணை வழங்கியுள்ளார்.

14. எனவே, அன்புகூர்ந்து மதுரையில் உள்ள நமது சன்னிதானங்கள் அனைவருக்கும் இதைத் தெரிவித்து, நான் வரும்போது இதை வாங்கிக் கொள்வதற்குரிய ஏற்பாட்டைச் செய்யுங்கள்.

15. இதேபோல், காரைக்குடியிலுள்ள பத்து சன்னிதானங்களும் கட்டாயமாக இந்தப் புத்தகத்தை வாங்கிக் கொள்ள வேண்டும் என்ற செய்தியைத் தெரிவித்து இப்புத்தகம் விற்பதற்குரிய ஏற்பாட்டைச் செய்யவும்.

16. இதுவரை நமது குருதேவர், மாதம் தோறும், 1000 ரூபாய்க்குக் குறையாமல் தமது அஞ்சல்களுக்கும், கட்டுரைகளுக்கும் இயந்திர

புகைப்பட நகல்களோ (Xerox Copies) அல்லது இயந்திர கையெழுத்து பிறதி நகல்களோ தயாரித்து; நம்முடைய அனைத்து சன்னிதானங்களுக்கும் அனுப்பி வந்துள்ளார்.

17. ஆனால், ஆனால், ஆனால் நம்மவர்கள் முக்கால் பங்கினருக்கு மேல் தங்களுக்கு வந்த நகல்கள் எல்லாம் எங்கேயிருக்கின்றன என்று கூடத் தெரியாமல் அவற்றை சிதைந்து சீரழிய விட்டு விட்டார்கள்; மீதியுள்ள கால் பங்கினரில், சரிபாதிக்கு மேல், குருதேவர் அனுப்பிய நகல்களை அப்படி அப்படியே ஏதேனும் பைகளிலோ, பெட்டிகளிலோ, அல்லது வீட்டு மாடங்களிலோ குப்பைகளாக குவித்து வைத்திருக்கிறார்கள். மீதியுள்ளவர்கள்தான் குருதேவர் அனுப்பிய நகல்களை கோப்புகளில் தொகுத்துக் காத்து வருகிறார்கள்.

18. இப்படி கோப்புகளில், குருதேவர் நகல்களைத் தொகுத்து வைத்துள்ளவர்களில்; யாராவது ஒருவராவது, யாராவது ஒருவராவது, யாராவது ஒருவராவது .... ஒருமுறையாவது, எல்லா நகல்களையும் முழுமையாகப் படித்திருப்பார்களா? முழுமையாகப் படித்திருப்பார்களா? முழுமையாகப் படித்திருப்பார்களா? என்றால் ..... என்றால் ..... என்றால் .... <u>பதில் காண்பது இயலாத ஒன்றாக இருக்கிறது</u>.

19. இதனால்தான், இதனால்தான், இதனால்தான், ..... நமது குருதேவர் மனம் வெந்து, சிந்தை நொந்து; இந்த இயந்திர கையெழுத்துப் பிறதி நூலுக்கு விலை ரூபாய் 35/- என்று நிர்ணயித்தார். அத்துடன் ரூபாய் 35 பெற்றுக் கொண்டுதான் இந்த நூலை எல்லோருக்கும் விற்க வேண்டும். அப்பொழுதுதான் எல்லோரும் பணம் கொடுத்து வாங்கிய இப்புத்தகத்தை ஒருமுறையாவது படித்துப் பார்ப்பார்கள்..... என்று முடிவு செய்துள்ளார்.

20. அன்பு கூர்ந்து, இதை தாங்களும் புரிந்து கொண்டு; மற்றவர்களுக்கும் புரிய வைத்திடுங்கள். மேலும் மதுரை மீனாட்சியம்மன் கோயில் பொற்றாமரைக் குளம், அழகர் கோயில் முன் மண்டப

வளாகம், தாத்தா மதுரைப் பாண்டி முனீசுவரர் கோயில் வளாகம், ஆத்தாள் தேவி மடப்புறம் காளி கோயில் வளாகம், .... முதலிய இடங்களில் நம்மவர்கள் இரண்டு மூன்று பேர்களாவது கூடியிருந்து இப்புத்தகத்தை ஒருவர் மாற்றி ஒருவர் படித்தால் பொதுமக்கள் இதைக் கேட்பார்கள். தங்களின் கடையிலும் அவ்வப்போது யாராவது ஒருவர் இப்புத்தகத்தை தொடர்ந்து உரத்த குரலில் படிக்க, மற்றவர்கள் கேட்டு தங்கள் தங்களின் நினைவில் நிறுத்திக் கொள்ளும்படி செய்தாலும் நல்லதுதான்.

21. இதேபோல், குருதேவர் தன்னைக் காண வருபவர்கள், தனிமனிதர்களாகத்தான் வர வேண்டும்; விரும்பினால், அவரவர் தங்களுடைய குடும்பத்தவருடன் மட்டும் வரலாம்; அதாவது இரண்டு சன்னிதானங்கள் சேர்ந்து வரக் கூடாது என்ற விதியை வகுத்திருக்கிறார். அப்பொழுதுதான், வருகின்ற தனிமனிதருடைய கொள்கைத் தெளிவு, பேச்சாற்றல், செயல்திறமை முதலியவைகளை ஆராய்ந்து அதற்கேற்ப பயிற்சியளிக்க முடியும் என்று முடிவெடுத்துள்ளார். இதை யாரும் தவறாக நினைக்க வேண்டாம்.

குறிப்பு:- நிர்வாகக் குழு, ஆய்வு மன்றக் குழு முதலிய நிகழ்ச்சிகளுக்கு சன்னிதானங்கள் சேர்ந்து வரலாம் என்பது விதிவிலக்கு. மற்றவை நேரில்.

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்!

**அன்பு**
**சித்தர் அம்பலக்கூத்தர்,**
**23-01-1995.**

**//உண்மை நகல்//**
**//இதன் மூல நகல் : சித்தர் அம்பலக்கூத்தர் அவர்களின் கையெழுத்தில் இருந்திட்டது,//**

# அந்தணர் அண்ணல் ஞானச்சாரியார் அழைக்கிறார்!

பொன்னேரி,
19.10.94

1. ஞான உலா வருகிறார் ஞானகுரு!
2. ஞான உலா வருகிறார் குவலய குருபீடம்!
3. ஞான உலா வருகிறார் இந்துவேத நாயகம்!
4. ஞான உலா வருகிறார் இந்துமதத் தந்தை!
5. ஞான உலா வருகிறார் ஞான வேந்தர்!
6. ஞான உலா வருகிறார் அருட்கொடை வள்ளல்!
7. ஞான உலா வருகிறார் பரபிறம்மம்!
8. ஞான உலா வருகிறார் நிறை யக்ஞர்!
9. ஞான உலா வருகிறார் அரசயோகிக் கருவூரார்!
10. ஞான உலா வருகிறார் அனாதிசிவனாரின் குருபீட வாரிசு!
11. ஞான உலா வருகிறார் ஆதிசிவனாரின் திருமட வாரிசு!
12. ஞான உலா வருகிறார் இந்துவேதம் அருளிய பதினெண்சித்தர் மடத்தின் பண்டார சந்நதி!
13. ஞான உலா வருகிறார் இந்துவேதம் அருளிய பதினெண்சித்தர் பீடத்தின் ஆதீனம்!
14. ஞான உலா வருகிறார் எல்லாம் வல்ல சித்தர்!
15. ஞான உலா வருகிறார் அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார்!
16. ஞான உலா வருகிறார் ஐந்தீ வேட்டல் அந்தணர்!
17. ஞான உலா வருகிறார் முத்தீ ஓம்பும் குருகுலத் தம்பிரான்!
18. ஞான உலா வருகிறார் கருகுல ஆதீனம்!
19. ஞான உலா வருகிறார் கருமூலப் பண்டாரம்!
20. ஞான உலா வருகிறார் தருகுல போதகர்!

21. ஞான உலா வருகிறார் திருகுல தேவர்பிரான்!
22. ஞான உலா வருகிறார் அனாதி ஆதி சத்திகள் சன்னிதானம்!
23. ஞான உலா வருகிறார் அனாதி ஆதி சத்திகள் கடந்த தம்பிரான் அடிகளார்!
24. ஞான உலா வருகிறார் அனாதி சிவனார் வாரிசு அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார்!
25. ஞான உலா வருகிறார் மனுநீதி அருளிய அனாதி சிவனாரின் வாரிசு அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார்!
26. ஞான உலா வருகிறார் முத்தமிழ்ச் சங்கம் நிறுவிய ஆதிசிவனார் வாரிசு அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியார்!
27. ஞான உலா வருகிறார் முத்தமிழ்ச் சங்க மெய்ஞ்ஞான சபைத் தலைவர் அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியார்!
28. ஞான உலா வருகிறார் இந்துவேத இந்துமத தலைமை ஆச்சாரிய குருபீடம் அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியார்!

......... இதற்கு மேல் தேவையான அருட்பட்டங்கள் நூற்றுக்கும் மேல் <u>பதினெண்சித்தர் பூசாமொழிப் புத்தகத்தில்</u> (ரூ.18/-) உள்ளது. அவற்றைப் பார்த்து தேவைக்கேற்ப அருட்பட்டங்களின் எண்ணிக்கையை அதிகமாக்கிக் கொள்ளலாம். கட்டாயமாக மேற்கூறிய 28 வரி அருட்பட்டங்களையும் ஒளிப் பேழையில் (Video Cassetteஇல்) பயன்படுத்துங்கள்.

## <u>முழக்கங்கள்</u>

(1) அழைக்கிறார்! அழைக்கிறார்! அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியார் அழைக்கிறார்! இந்துவேதம் தழைக்க உழைக்க அழைக்கிறார்!

(2) அழைக்கிறார்! அழைக்கிறார்! அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அழைக்கிறார்! இந்துமதம் தழைக்க உழைக்க அழைக்கிறார்!

(3) அழைக்கிறார்! அழைக்கிறார்! அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியார் அழைக்கிறார்! அருளாட்சி அமைக்க உழைக்க அழைக்கிறார்!

(4) அழைக்கிறார்! அழைக்கிறார்! அந்தணர் அண்ணல் ஞானச்சாரியார் அழைக்கிறார்! இந்துவேதம் பரப்பிட உழைக்க அழைக்கிறார்!

(5) அழைக்கிறார்! அழைக்கிறார்! அந்தணர் அண்ணல் ஞானச்சாரியார் அழைக்கிறார்! இந்துமதம் பாதுகாத்திட உழைக்க அழைக்கிறார்!

(6) அழைக்கிறார்! அழைக்கிறார்! அந்தணர் அண்ணல் ஞானச்சாரியார் அழைக்கிறார்! இந்துக்களிடையேயுள்ள வேற்றுமைகளை அகற்றிட உழைக்க அழைக்கிறார்!

(7) அழைக்கிறார்! அழைக்கிறார்! அந்தணர் அண்ணல் ஞானச்சாரியார் அழைக்கிறார்! இந்துக்களிடையேயுள்ள பிரிவினைகளை அகற்றிட உழைக்க அழைக்கிறார்!

(8) அழைக்கிறார்! அழைக்கிறார்! அந்தணர் அண்ணல் ஞானச்சாரியார் அழைக்கிறார்! இந்துக்களிடையேயுள்ள பகை உணர்வுகளை அகற்றிட உழைக்க அழைக்கிறார்!

(9) அழைக்கிறார்! அழைக்கிறார்! அந்தணர் அண்ணல் ஞானச்சாரியார் அழைக்கிறார்! இந்துக்களிடையேயுள்ள உயர்வு தாழ்வு வெறியுணர்வுகளை நீக்கிட உழைக்க அழைக்கிறார்!

(10) அழைக்கிறார்! அழைக்கிறார்! அந்தணர் அண்ணல் ஞானச்சாரியார் அழைக்கிறார்! இந்துக்களிடையே ஒற்றுமையை உருவாக்கிட உழைக்க அழைக்கிறார்!

(11) அழைக்கிறார்! அழைக்கிறார்! அந்தணர் அண்ணல் ஞானச்சாரியார் அழைக்கிறார்! இந்துக்கள் இந்துவேதத்தை தெரிந்து கொள்ளும்படி செய்திட உழைக்க அழைக்கிறார்!

(12) அழைக்கிறார்! அழைக்கிறார்! அந்தணர் அண்ணல் ஞானச்சாரியார் அழைக்கிறார்! இந்துக்கள் இந்துமதத்தை புரிந்து கொள்ளும்படி செய்திட உழைக்க அழைக்கிறார்!

(13) அழைக்கிறார்! அழைக்கிறார்! அந்தணர் அண்ணல் ஞானச்சாரியார் அழைக்கிறார்! இந்துக்கள் இந்துக் கோயில்களைப் பாதுகாக்கும்படி செய்திட உழைக்க அழைக்கிறார்!

(14) அழைக்கிறார்! அழைக்கிறார்! அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியார் அழைக்கிறார்! இந்துக்களை இந்துக்களாக வாழும்படிச் செய்திட உழைக்க அழைக்கிறார்!

(15) அழைக்கிறார்! அழைக்கிறார்! அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியார் அழைக்கிறார்! இந்துக்கள் இந்துமத வரலாற்றினை தெரிந்து கொள்ளும்படிச் செய்திட உழைக்க அழைக்கிறார்!

(16) அழைக்கிறார்! அழைக்கிறார்! அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியார் அழைக்கிறார்! இந்துக்கள் இந்துமத இலக்கியங்களை படித்திடும்படிச் செய்திட உழைக்க அழைக்கிறார்!

(17) அழைக்கிறார்! அழைக்கிறார்! அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியார் அழைக்கிறார்! இந்துக்கள் இந்துமத அருளாளர்களின் போதனைகளைப் புரிந்து கொள்ளும்படிச் செய்திட உழைக்க அழைக்கிறார்!

(18) அழைக்கிறார்! அழைக்கிறார்! அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியார் அழைக்கிறார்! இந்துக்கள் இந்துமத அருளாளர்களின் சாதனைகளைத் தெரிந்து கொள்ளும்படிச் செய்திட உழைக்க அழைக்கிறார்!

(19) அழைக்கிறார்! அழைக்கிறார்! அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியார் அழைக்கிறார்! இந்துக்களை தன்னம்பிக்கை பெற்றிடும்படிச் செய்திட உழைக்க அழைக்கிறார்!

(20) அழைக்கிறார்! அழைக்கிறார்! அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியார் அழைக்கிறார்! இந்துக்களை இந்துவேத அறிவு பெற்றிடும்படிச் செய்திட உழைக்க அழைக்கிறார்!

(21) அழைக்கிறார்! அழைக்கிறார்! அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியார் அழைக்கிறார்! இந்துக்கள் இந்துமத உணர்வு பெற்றிடும்படிச் செய்திட உழைக்க அழைக்கிறார்!

(22) அழைக்கிறார்! அழைக்கிறார்! அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியார் அழைக்கிறார்! இந்துக்கள் இந்துமதத் தலைவர்களை போற்றிப் பேணிடச் செய்திட உழைத்திட அழைக்கிறார்!

(23) அழைக்கிறார்! அழைக்கிறார்! அந்தணர் அண்ணல் ஞானச்சாரியார் அழைக்கிறார்! இந்துக்கள் இந்துமத நிறுவன நிர்வாகங்களை மீண்டும் செயல்படச் செய்திட உழைக்க அழைக்கிறார்!

(24) அழைக்கிறார்! அழைக்கிறார்! அந்தணர் அண்ணல் ஞானச்சாரியார் அழைக்கிறார்! இந்துமதம் மறுமலர்ச்சி பெறச் செய்திட உழைக்க அழைக்கிறார்!

(25) அழைக்கிறார்! அழைக்கிறார்! அந்தணர் அண்ணல் ஞானச்சாரியார் அழைக்கிறார்! இந்துமதம் வளவளர்ச்சி பெறச் செய்திட உழைக்க அழைக்கிறார்!

(26) அழைக்கிறார்! அழைக்கிறார்! அந்தணர் அண்ணல் ஞானச்சாரியார் அழைக்கிறார்! இந்துமதம் ஆட்சிமீட்சி பெறச் செய்திட உழைக்க அழைக்கிறார்!

(27) அழைக்கிறார்! அழைக்கிறார்! அந்தணர் அண்ணல் ஞானச்சாரியார் அழைக்கிறார்! இந்துக்களை விழிச்சி பெறச் செய்திட உழைக்க அழைக்கிறார்!

(28) அழைக்கிறார்! அழைக்கிறார்! அந்தணர் அண்ணல் ஞானச்சாரியார் அழைக்கிறார்! இந்துக்களை எழிச்சி பெறச் செய்திட உழைக்க அழைக்கிறார்!

(29) அழைக்கிறார்! அழைக்கிறார்! அந்தணர் அண்ணல் ஞானச்சாரியார் அழைக்கிறார்! இந்துக்களை இந்துவேத வழியில் பயிற்சி பெறச் செய்திட உழைக்க அழைக்கிறார்!

(30) அழைக்கிறார்! அழைக்கிறார்! அந்தணர் அண்ணல் ஞானச்சாரியார் அழைக்கிறார்! இந்துக்களை இந்துமத வழியில் முயற்சி செய்யச் செய்திட உழைக்க அழைக்கிறார்!

(31) அழைக்கிறார்! அழைக்கிறார்! அந்தணர் அண்ணல் ஞானச்சாரியார் அழைக்கிறார்! இந்துக்களை இந்துமத வழியில் உயர்ச்சி அடையச் செய்திட உழைக்க அழைக்கிறார்!

(32) அழைக்கிறார்! அழைக்கிறார்! அந்தணர் அண்ணல் ஞானுச்சாரியார் அழைக்கிறார்! இந்துக்களை இந்துமத வழியில் செழிச்சி பெறச் செய்திட உழைக்க அழைக்கிறார்!

(33) அழைக்கிறார்! அழைக்கிறார்! அந்தணர் அண்ணல் ஞானுச்சாரியார் அழைக்கிறார்! இந்துக்களை இந்துமத வழியில் மீட்சி பெறச் செய்திட உழைக்க அழைக்கிறார்!

(34) அழைக்கிறார்! அழைக்கிறார்! அந்தணர் அண்ணல் ஞானுச்சாரியார் அழைக்கிறார்! இந்துக்களை இந்துமத வழியில் ஆட்சி பெறச் செய்திட உழைக்க அழைக்கிறார்!

(35) அழைக்கிறார்! அழைக்கிறார்! அந்தணர் அண்ணல் ஞானுச்சாரியார் அழைக்கிறார்! இந்துக்களை இந்துமத வழியில் மாட்சி பெறச் செய்திட உழைக்க அழைக்கிறார்!

====================

அன்பு தியாகராசன் அவர்களுக்கு,

1. இதிலுள்ள அனைத்து முழக்கங்களை, குருதேவரின் அருட்பட்டங்களை, நமது கருத்து வாசகங்களை ஆங்காங்கே தக்க இடங்களில் முழக்கியபடியே ஒளிப் பதிவு (Video) நாடாவை பதிவு செய்யவும்.

2. தாங்கள் மனைவியுடன் எப்பொழுது வருகிறீர்கள் என்பதை முன்கூட்டியே தெரிவியுங்கள். வெள்ளி இரவு அல்லது சனிக்கிழமை தொலைபேசியில் தொடர்பு கொள்ளுங்கள்.

அன்புடன்

சித்தர் அம்பலக்கூத்தர்,

19-10-1994.

**//உண்மை நகல்//**

**//இதன் மூல நகல் : சித்தர் அம்பலக்கூத்தர் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**



11வது பதினெண்சித்தர் பீடாதிபதி



மெய்ஞ்ஞானக்கொடி



12வது பதினெண்சித்தர் பீடாதிபதி

12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கிக் கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப்படுகின்றன.

“ஒவ்வொரு மொழியினரும் அவரவர் மொழியிலுள்ள மந்திரங்களைச் சொல்லி; அவரவர்கள் மொழிக்குரிய, மொழியைப் பேசக்கூடிய, மொழியைத் தெரிந்த கடவுள்களை மட்டுமே கும்பிட வேண்டும்; அப்பொழுதுதான் பயன் ஏற்படும்.”

“ஒவ்வொரு நாட்டவரும் அவரவர் நாட்டு எல்லைக்குள் இருக்கின்ற, அவரவர் நாட்டுப் பண்பாட்டையும், நாகரிகத்தையும் ஏற்றுக் கொள்கின்ற கடவுள்களை மட்டுமே கும்பிட வேண்டும், கும்பிட்டேயாக வேண்டும். அப்போதுதான் உரிய பயன் ஏற்படும்; உரிய பயன் ஏற்பட்டிடும்.”

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai. Printed by Mr Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell: 09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org
https://gurudevar.in
https://induism.org
https://books.gurudevar.org
https://gurudevar.org
Email: indhuism@gmail.com

காணிக்கை : ரூ15/-